# பத்திரிக்கை செய்தி

**தற்காலிக பணிநீக்கத்தில் இருந்த உதவி பொறியாளரிடம் அதனை நீக்க மற்றும் நல்ல இடத்தில் பணிபுரிய பணி ஆணை பெற்றுத்தரவேண்டி லஞ்சம் கேட்ட உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு மூன்று வருடம் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு.**

இராயப்பேட்டை அரசு மருத்துவமனை பிரிவில் உதவி பொறியாளராக (Assistant Engineer) பணிபுரிந்து வந்த திரு.இரா.இராஜகோபால் என்பவர் அந்த மருத்துவமனையில் உள்ள மிதிவண்டி வாகன நிறுத்தம் குத்தகைபணத்தை கையாடல் செய்த குற்றத்திற்காக கடந்த 18.03.2010 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டிருந்தார். தற்காலிக பணிநீக்க காலத்திற்கு அவருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நடத்தை விதியின்படி பிழைப்பூதியம் வழங்கப்பட்டு வந்தது.

திரு.ஜெயபால் மோகன், உதவி செயற்பொறியாளர், (Assistant Executive Engineer) பொதுப்பணித்துறை, கட்டிட பராமரிப்பு உபகோட்டம் எண்.4 (மருத்துவ பணிகள்) டி.எம்.எஸ் வளாகம், சென்னை என்பவர் அவருக்கு மேலதிகாரியாக இருந்தார். அவர் திரு.இராஜகோபால் என்பவரின் தற்காலிக பணிநீக்க ஆணையை ரத்து செய்து நல்ல இடத்தில் பணியமர்வு ஆணை பெற்றுத்தரவும் அதுவரையில் 75 சதவீதம் பிழைப்பூதியத்தை தடையின்றி பெறவும் அவருடைய நண்பரான அரசு வழக்கறிஞர் மூலம் சட்ட கருத்துரு பெற்றுத்தரவும் ரூ.2,00,000/- லஞ்சமாக தருமாறு தொலைபேசியில் கேட்டுள்ளார். திரு.இராஜகோபால் அதற்கு உடன்படாததால் அவருக்கு மாதமாதம் பெற்றுத்தரவேண்டிய பிழைப்பூதியத்தை 2014 ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கு பெற்றுத்தர காலம்தாழ்த்தியுள்ளார். மேலும் அவரது வருங்கால பொது சேமநல வைப்பு நிதியிலிருந்து 75 சதவீதத்தை தன்னுடைய மனைவியின் மருத்துவ செலவிற்காக

விண்ணப்பித்த போது அதனை அனுப்பாமல் காலம் தாழ்த்தியுள்ளார். திரு.இராஜகோபாலுக்கு வேறுவழியில்லாமல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையில் 07.02.2015 அன்று புகார் கொடுத்துள்ளார்.

மேற்படி புகாரினை முதல் கட்ட விசாரணை செய்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை தலைமையக குற்ற எண்.07/2015 சட்டபிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988 ன் படி திரு.ஜெயபால் மோகன், உதவி செய்றபொறியாளர் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கானது சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று (10.02.2023) இவ்வழக்கில் குற்றவாளி திரு.ஜெ.ஜெயபால் மோகன், முன்னால் உதவி செயற்பொறியாளர் அவர்கள் புகார்தாரரிடம் ரூ.2,00,000/- லஞ்சமாக கேட்ட குற்றத்திற்காக மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ.1000/- அபராதமும் விதித்து சிறப்பு நீதிமன்ற நீதிபதியால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

# <u>PRESS NOTE</u>

<u>Tr.Jayapaul Mohan, former Assistant Executive Engineer (AEE), Public Work Department, Building Maintenance Sub-Division, Medical Services, DMS Campus convicted for the three years rigorous imprisonment for demanding bribe of Rs. 2,00,000/- for favouring the suspended Assistant Engineer Tr.R.Rajagopal in revoking the suspension.</u>

The complainant Tr.R.Rajagopal was an assistant engineer in the Public Works Department and was suspended from the duty on 18.03.2010 for the misappropriation of Government Fund. He was allowed to have a subsistence allowance for his living which is permitted under the Fundamental Rules of Tamil Nadu Government Servant Rules.

The accused Tr.Jayapaul Mohan voluntarily demanded Rs.2,00,000/- as illegal gratification from Tr.R.Rajagopal over phone to make arrangement to revoke his suspension and to get him posted in a favourable place by obtaining favourable legal opinion and also to provide him a subsistence allowance of 75% to meet out the medical expense of his wife without any break.

As the complainant was not come forward to give the demanded amount, the accused officer Tr.Jayapaul Mohan intentionally delayed his subsistence allowance for the month of October, November and December in 2014 and also delayed in processing his application for GPF advance in order get illegal gratification from him. In spite of request to the senior officers in the Public Works Department to release his subsistence allowance, Tr.Jayapaul Mohan did not process his request in order to get illegal gratification from him. The complainant has no other choice and preferred complaint against Tr.Jayapaul Mohan in the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai.

On the complaint of Tr.R.Rajagopal, an enquiry was conducted, and a case was registered in the DVAC Headquarters Crime Number 7/2015 under section 7 of Prevention of Corruption Act, 1988. The above said case was in the trial at the Special Court under the Prevention of Corruption Act, Chennai. Today (10.02.2023), the Hon'ble Special Court Judge pronounced judgment against the accused Tr.Jayapaul Mohan. The Accused officer is found guilty for the commission of the offence under section 7 of Prevention of Corruption Act, 1988 and he is sentenced to undergo Rigorous imprisonment for three years and shall pay a fine of Rs.1000/- and in default to undergo simple imprisonment for 3 months.